கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
கலை கலாசார பீடம், புவியியற்றுறை.
மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு சிறப்பு/பொதுக் கலைமாணித் தேர்வு 2015/2016 (February 2018).

| | | |
|---|---|---|
| 0GY 3113 | சூழல் முகாமைத்துவம் (Environmental Management) | நேரம் 03 மணித்தியாலங்கள் |

- பகுதி-I இல் இருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி-II இல் இருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி - I

1) அ. சூழல் தொகுதி ஒன்றில் உயிர் சூழல் கூறுகள் என்பதனால் நீர் கருதுவது யாது? என்னும் பதத்தினை வரையறுத்து, பௌதீகச் சூழல் கூறுகளை வகைப்படுத்துக.
(05 புள்ளிகள்)

ஆ. சூழல் முகாமைத்துவம் என்பதற்கூடாக நீர் விளங்கிக்கொள்வது யாது?
(07 புள்ளிகள்)

இ. சூழலின் தரம் பேணப்படவேண்டியதன் அவசியத்தை மூன்று உதாரணங்களின் வாயிலாக எடுத்துரைக்குக.
(08 புள்ளிகள்)

2) அ. இயற்கை வளங்களைக் குறிப்பிட்டு, அவற்றினை வகைப்படுத்துக.
(08 புள்ளிகள்)

ஆ. இயற்கை மூலதனம் (Natural capital) என்பதனால் கருதப்படுவது யாது? அச்செயற்பாடுகள் குறித்து சுருக்கமாக விளக்குக.
(12 புள்ளிகள்)

3) அ. சூழல் தரமிழக்கக் காரணமான மானிடக் காரணிகள் எவையெனக் குறிப்பிடுக.
(08 புள்ளிகள்)

ஆ. மேற்கூறப்பட்ட காரணிகள் சூழலில் தோற்றுவிக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்கான பொதுவான முகாமைத்துவ உபாயங்கள் குறித்து கருத்துரைக்குக.
(12 புள்ளிகள்)

## பகுதி – II

4) அ. காடுகளின் சூழலியல் முக்கியத்துவம் பற்றி உதாரணங்களுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

ஆ. வளி மாசடைதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நீர் முன்வைக்கும் முகாமைத்துவச் செயன்முறைகள் பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

5) நிலைபேண் அபிவிருத்தியினை கருத்திற்கொண்டு மனித சமுதாயத்தின் சூழல்-நேய (Eco-friendly) அணுகுமுறைகள் அமையவேண்டிய விதம் குறித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

6) சூழல் முகாமைத்துவம் தொடர்பில் இன்று உலகின் கவனம் தீவிரமாக ஈர்க்கப்படுவதற்கு குடித்தொகைப் பெருக்கம், தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியன எவ்வாறு காரணமாக அமைகின்றது என்பதனை உதாரணங்களை முன்வைத்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ. திண்மக் கழிவு முகாமைத்துவம்

ஆ. நீர் மாசாக்கமும் பாதிப்புகளும்

இ. பச்சை வீட்டுத் தாக்கம்

(10x2=20 புள்ளிகள்)